**மார்ச் – 06**

# TNPSC துளிகள்


- விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் உள்ள அரசுப் பள்ளியில் இந்தியாவின் முதல் வரைகதை புத்தக நூலகம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.
- கிரிக்கெட்டில் நமது நாட்டின் சிறந்த இடது கை சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான மகாராஸ்டிராவின் பத்மகர் ஷிவல்கர் காலமானார்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான (PwDs) அணுகல் மற்றும் உள்ளடக்கத்தினை மிக நன்கு ஊக்குவிப்பதற்காக என்று, டேராடூனில் உள்ள தேசிய பார்வைத் திறன் குறைபாடுகள் உள்ளவர்களின் அதிகாரமளிப்பு நிறுவனம் (NIEPVD) ஆனது 'சுகம்ய யாத்ரா' (அணுகக் கூடிய வகையிலான பயணம்) எனும் செயலியை வெளியிட்டுள்ளது.
- உலக வங்கி மற்றும் ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கி (AfDB) ஆனது, முக்கியப் பங்குதாரர்களுடன் இணைந்து 2030 ஆம் ஆண்டிற்குள் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் 300 மில்லியன் மக்களுக்கு மின்சார வசதி வழங்குவதற்காக திட்டம் 300 எனும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- சிற்பங்கள் மற்றும் நவீன ஓவியக் கலைக்குப் புகழ் பெற்ற பிரபல இந்தியக் கலைஞரான குஜராத்தின் ஹிம்மத் ஷா காலமானார்.
- அமைதி, அகிம்சை/வன்முறையற்ற தன்மை மற்றும் உலகளாவிய நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முதல் உலக அமைதி மையம் ஆனது ஹரியானாவின் குருகிராமில் திறக்கப் பட்டுள்ளது.
- உலகின் மிக வயதான (98 வயது 63 நாட்கள்) டெஸ்ட் கிரிக்கெட் வீரரான ரான் டிராப்பர் தென்னாப்பிரிக்காவில் காலமானார்.
- விதர்பா அணியானது, 2024-25 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் கேரளா அணியினை வீழ்த்தி, ஏழு போட்டித் தொடர்களில் தனது மூன்றாவது ரஞ்சிக் கோப்பையை வென்றது.
    - இது கேரளா அணியினைப் பொருத்தவரை, அதனுடைய முதல் ரஞ்சி கோப்பை இறுதிப் போட்டியாகும்.
- அசாம் மாநில அரசானது, சிராங்-ரிப்பு யானைகள் வளங்காப்பகத்தினை அந்த மாநிலத்தின் 8வது தேசியப் பூங்காவாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
    - இந்தப் புதியத் தேசியப் பூங்காவானது சிக்னா ஜ்வாலாவ் தேசிய பூங்கா என்று பெயரிடப் பட உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கடன் பெறுதலில் தமில்நாட்டுப் பெண்களின் பங்கு

- நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் கடன் பெறுதலில் பெண்களின் பங்கு 44% அதிகமாக உள்ளது.
- தமிழ்நாடு (44%), ஆந்திரப் பிரதேசம் (41%), தெலுங்கானா (35%), கர்நாடகா (34%) போன்ற தென் மாநிலங்களில் குறைந்தபட்சம் ஒரு நேரடிக் கடனையாவது கொண்டுள்ள பெண்களின் பங்கு அதிகமாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி நாடு முழுவதுமான ஒட்டுமொத்த அளவு 31% ஆக இருந்தது.

- கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் கடன் பெறும் பெண்களின் பங்கில் 10% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் பதிவானது.
- மகாராஷ்டிராவில் கடன் பெறுதலில் பெண்களின் பங்கு 30% ஆகவும், இராஜஸ்தான் மாநிலத்தில் 26% ஆகவும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் 25% ஆகவும், உத்தரப் பிரதேச மாநிலத்தில் 23% ஆகவும் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, உத்தரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகியவை அனைத்து CIBIL குறியீடு சுயக் கண்காணிப்புப் பெண்களின் கடன் பெறுதல் பங்கானது 49% ஆகவும் இருந்தன.
- இதில் தமிழ்நாடு மாநிலத்தின் பங்கு மட்டும் 11% ஆக இருந்தது.




## தேசியச் செய்திகள்


### IRCTC மற்றும் IRFC - நவரத்னா அந்தஸ்து




- இந்திய இரயில்வே உணவு வழங்கீடு மற்றும் சுற்றுலாக் கழகம் (IRCTC) மற்றும் இந்திய இரயில்வே நிதிக் கழகம் (IRFC) ஆகியவை முறையே நாட்டின் 25வது மற்றும் 26வது நவரத்னா நிறுவனங்களாக மாறியுள்ளன.

- இந்திய இரயில்வே நிர்வாகத்தின் பட்டியலிடப்பட்ட ஏழு மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களும் (CPSEs) தற்போது நவரத்னா நிறுவன அந்தஸ்தைப் பெற்றுள்ளன.
- இந்திய இரயில்வே நிர்வாகத்தில் மொத்தம் 12 CPSE நிறுவனங்கள் உள்ளன.

## விவசாயிகளின் பங்கு குறித்த இந்திய அளவிலானக் கணக்கெடுப்பு




- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அதிகாரிகளால் இந்த இந்திய அளவிலான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- விவசாயிகள், முக்கிய ராபி பருவப் பயிர்களுக்கான நுகர்வோர் விலையில் 40 முதல் 67 சதவீதம் வரையிலான பங்கைப் பெற்றனர்.
- கோதுமை விவசாயிகள், நுகர்வோர் விலையில் 67 சதவீதப் பங்கைப் பெற்றுள்ளதுடன் மிகப்பெரிய பயனாளிகளாக உருவெடுத்துள்ளனர்.
- அரிசி விவசாயிகள், சில்லறை விலையில் 52 சதவீத பங்கைப் பெற்றனர்.
- விரைவில் கெட்டுப் போகும்/ அழுகக் கூடியப் பொருட்களின் (பழங்கள் மற்றும் காய்கறிகள்) விலையில் விவசாயிகளின் பங்கு ஆனது சுமார் 40-63 சதவீதம் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- எண்ணெய் வித்துக்களில், 2021 ஆம் ஆண்டு அறிக்கை செய்த 55 சதவீத மதிப்பீட்டோடு ஒப்பிடும்போது, ராப்சீட் மற்றும் கடுகு (R&M) விவசாயிகளின் பங்கு 52 சதவீதமாக இருந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## உத்தி சார் இணைய சங்கேதப் பண இருப்பு – அமெரிக்கா


- அமெரிக்க அதிபர் டிரம்ப் "உத்தி சார் இணைய சங்கேதப் பண இருப்பிற்கான" திட்டங்களை அறிவித்துள்ளார் என்ற நிலையில் இது இணைய சங்கேதப் பணத்தினை வாங்கவும் விற்கவும் அமெரிக்காவிற்கு வாய்ப்பளிக்கும்.
- இந்த இருப்பு ஆனது பிட்காயின், ஈதர், XRP, சோலானா மற்றும் கார்டானோ ஆகிய ஐந்து இணைய சங்கேதப் பணத்தினை வைத்திருப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

- குற்றவியல் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டவற்றிலிருந்து அமெரிக்கா சுமார் 200,000 பிட்காயின் சொத்துக்களை வைத்திருப்பதாக நம்பப்படுகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ப்ளூ கோஸ்ட் திட்டம் 1




- ஃபயர்ஃபிளை ஏரோஸ்பேஸ் எனும் ஓர் அமெரிக்க நிறுவனம் ஆனது, தனது விண்கலத்தினை நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது.
- இது நிலவின் வடகிழக்குப் பக்கத்திற்கு அருகிலுள்ள மேரே கிரிசியத்தில் மோன்ஸ் லாட்ரெய்லெ எனப்படும் எரிமலை உருவாக்கத்திற்கு அருகில் உள்ளது.
- இந்த மைல்கல்லை எட்டிய ஒரு தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஆய்வுப் பயணத்தினை இது குறிக்கிறது, மேலும் அதனை சீர் முறையில் செய்து முடித்த முதல் ஆய்வுப் பயணமும் இதுவாகும்.
- சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய ஐந்து


நாடுகள் மட்டுமே நிலவில் மிதமான முறையில் தரையிறக்கங்களை மேற்கொண்டு உள்ளன.

## ஆதித்யா-L1 – கர்னெல் எனப்படும் சூரியச் சுடரின் முதல் படம்

- இந்தியாவின் ஆதித்யா-L1 ஆய்வுக் கலமானது 'கர்னெல்' எனப்படும் சூரியச் சுடரின் முதல் படத்தைப் பிடித்துள்ளது.
- இந்த அரிய பதிவானது, சூரிய வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- இந்தப் படம் ஆனது ஒளிக்கோளம் மற்றும் நிறக் கோளத்தில் நிகழும் ஒரு நிகழ்வைக் காட்டுகிறது.




## மின்னல் மற்றும் கதிர்வீச்சு மண்டலங்களுக்கு இடையிலான தொடர்பு





- மின்னலால் உருவாகும் சில மின்காந்த அலைகள் ஆனது எலக்ட்ரான் பொழிவுகளைத் தூண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உள் கதிர்வீச்சு மண்டலமானது, பூமியிலிருந்து சுமார் 621 மைல்கள் (1000 கிலோமீட்டர்) உயரத்தில் உள்ளன.

- இது எலக்ட்ரான்கள் மற்றும் உயர் ஆற்றல் புரோட்டான்களால் ஆன, காலப்போக்கில் நிலை பெறும் மண்டலமாகும்.
- மின்னல் என்பது இடியுடன் கூடிய மழைப் பொழிவின் போது வானத்தை ஒளிரச் செய்யும் பெரிய மின்காந்த ஓட்டமாகும்.
- அவை உண்மையில் மின்னலால் உருவாக்கப்பட்ட வளிமண்டல இடையூறுகளான மின்காந்த அலைகளை உருவாக்கக் கூடியவை.
- புவி காந்தப் புயல்கள் என்பது பூமிக்கு அருகிலுள்ள விண்வெளி சூழலில் ஏற்படும் இடையூறுகள் ஆகும் என்பதோடு அவை பெரும்பாலும் சூரியனின் மேற்பரப்பில் உருவாகும் பெரிய வெடிப்புகளால் ஏற்படுகின்றன.
- சூரியச் செயல்பாடுகள் ஆனது, பூமியின் கதிர்வீச்சு மண்டலங்களில் இடையூறுகளை ஏற்படுத்துகிறது மற்றும் அதன் உள் மண்டலங்களில் மிக அதிக ஆற்றல் கொண்ட எலக்ட்ரான்களைக் குவிக்கிறது.
- பின்னர் மின்னல் உருவாக்கமானது, இந்த எலக்ட்ரான்களுடன் தொடர்பு கொள்வதால் விரைவான வெடிப்புகளை உருவாக்குகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆர்க்டிக் பனிப்பாறைகளில் மீத்தேன் கசிவு




- ஆர்க்டிக் பனிப்பாறைகள் வளிமண்டலத்தில் கணிசமான அளவு மீத்தேன் வாயுவினை வெளியிட்டு வருவதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உருகும் பனிப்பாறை நதியில் காணப்படும் மீத்தேன் செறிவு ஆனது வளிமண்டல சம நிலை அளவை விட 800 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.
- இங்கு வெளியிடப்பட்ட மீத்தேன் ஆனது, பனிக்கு அடியில் உள்ள நுண்ணுயிர் செயல்பாட்டால் உற்பத்தி செய்யப்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.
- மாறாக அது மில்லியன் கணக்கான ஆண்டுகளாக இந்தப் பிராந்தியத்தின் பண்டைய காலப் புவியியல் அமைப்புகளில் சிக்கியுள்ள மீத்தேன் போன்ற வெப்பமாக்க மூலங்களிலிருந்து உருவானது.
- மீத்தேன் வாயுவானது கார்பன் டை ஆக்சைடுக்கு அடுத்தபடியாக, பருவநிலை மாற்றத்தினைத் தூண்டும் மிக முக்கிய இயக்கிகளில் ஒன்றாகும் என்பதோடு இது தொழில்துறைக்கு முந்தைய ஒரு காலத்திலிருந்துப் பதிவான சுமார் 30 சதவீத வெப்ப

மயமாதலுக்கு காரணமாகும்.

- வெப்பமயமாதலில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக, மீத்தேன் வாயுவானது கார்பன் டை ஆக்சைடை விட 80 மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாக இருந்து வருகிறது.

## கடல் வாழ் யூனிகார்ன்கள் - நார்வால்கள்

- ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் நார்வால்கள் /கொம்பன் என்ற வகை திமிங்கலங்கள் வேட்டையாடுவதற்குத் தங்கள் தந்தங்களைப் பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்து காட்சிகளை முதன்முறையாக கனடாவின் அறிவியலாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.
- நார்வால் (மோனோடான் மோனோசெரோஸ்) தொலைதூர ஆர்க்டிக் கடல் பகுதிகளில் வாழ்கின்றன.
- ஆண் திமிங்கலங்கள் ஆனது, அவற்றின் நீண்ட, சுழல் வடிவத் தந்தங்களுக்குப் பெயர் பெற்றவை. இது உண்மையில் அவற்றின் நீட்சியடைந்த பற்களாகும்.



## கோபிடிஸ் பெய்ஜிங்கென்சிஸ்





- கோபிடிஸ் பெய்ஜிங்கென்சிஸ் என்று அதிகாரப்பூர்வமாகப் பெயரிடப்பட்ட ஒரு புதிய வகை அயிரை மீன் இனமானது, சுமார் 40 ஆண்டுகளில் முதல் முறையாக சீனாவின் பெய்ஜிங் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.
- பின்யின் எனப்படுகின்ற சீன நாட்டின் எழுத்து முறையில் "பெய்ஜிங்" என்ற ஒரு சொல்லைப் பயன்படுத்தி ஒரு மீன் இனத்திற்கு பெயரிடப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.

- ❖ வரலாற்று ரீதியாக, பெய்ஜிங் பகுதியில் 78 வகையான உள்நாட்டு மீன் இனங்கள் காணப் படுகின்றன.
- ❖ ஆனால் 2010 ஆம் ஆண்டில் சுமார் 40 இனங்கள் குறித்த தகவல் மட்டுமே சேகரிக்கப் பட்டன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## யுனெஸ்கோ அமைப்பின் பன்மொழி கல்வி குறித்த அறிக்கை 2025

- ❖ யுனெஸ்கோ அமைப்பினால் 'Language Matter: Global Guidance on Multilingual Education' என்ற தலைப்பிலான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ உலக மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு அவர்கள் பேசும் அல்லது புரிந்து கொள்ளும் மொழியில் கல்வி கிடைப்பதில்லை.
- ❖ இந்த எண்ணிக்கையானது சில குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 90% ஆக உயர்ந்துள்ளது.
- ❖ 31 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்த இளையோர்கள் கல்வியில் மொழி சார்ந்த தடைகளை எதிர்கொள்கின்றனர்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஆஸ்கார் விருதுகள் 2025


- ❖ 97வது அகாடமி விருதுகள் சமீபத்தில் வழங்கப்பட்டன.
- ❖ இந்த ஆண்டு விருது விழாவில் 23 பிரிவுகளில் சிறந்தச் சாதனைகளை கௌரவிக்கும் விதமாக விருதுகள் வழங்கப்பட்டன.
- ❖ சீன் பேக்கரின் காதல் மற்றும் நகைச்சுவை நாடகமான அனோரா சிறந்த படம், சிறந்த நடிகை (மைக்கி மேடிசன்), சிறந்த இயக்குனர், சிறந்த திரைப்பட தொகுப்பு மற்றும் சிறந்த அசல் திரைக்கதை ஆகிய ஐந்து பிரிவுகளில் விருதுகளை வென்று இந்த விருது விழாவின் மிகப்பெரிய வெற்றியாளராக உருவெடுத்துள்ளது.
- ❖ அட்ரியன் பிராடி, தி ப்ரூடலிஸ்ட் படத்திற்காக சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் விருதை வென்றார் .

- எமிலியா பெரெஸ் படத்திற்காக சிறந்த துணை நடிகை விருது ஜோ சல்டானாவுக்கு வழங்கப் பட்டது.
- சிறந்த சர்வதேச திரைப்படம் - I'm Still Here – பிரேசில்.



# இதரச் செய்திகள்

## இந்தியாவில் மொழியியல் தரவு




- இந்தி மொழி பேசாதவர்கள் பொதுவாக புதிய மொழிகளைக் கற்க தயாராக உள்ளனர், அதே நேரத்தில் இந்தி மொழி பேசுபவர்கள் மிக குறைவான பன்மொழித் தன்மையைக் கொண்டுள்ளனர்.
- 1991 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகப் பேசும் 84.5% நபர்கள் (மாநிலத்தில் தமிழ் மொழியை முதல் மொழியாகப் பேசுபவர்கள்) ஒருமொழி பேசுபவர்களாக இருந்தனர், இது 2011 ஆம் ஆண்டில் 78% ஆகக் குறைந்தது.
- இதே போல், ஒடிசாவில் தாய்மொழியாக ஒடியா மொழி பேசுபவர்களின் (ஒருமொழி பேசும் நபர்கள்) பங்கு 86 சதவீதத்திலிருந்து 74.5% ஆகக் குறைந்தது.
- இதற்கு நேர்மாறாக, இந்தி மொழி முதன்மையான மொழியாக இருக்கும் சில மாநிலங்களில் ஏற்கனவே ஒரு மொழி பேசுபவர்களின் பங்கு மிக அதிகமாக இருந்தது,

என்பதோடு மேலும் பல சூழல்களில் இந்தப் பங்கானது காலப்போக்கில் அதிகரித்தது.

- உதாரணமாக, 1991 ஆம் ஆண்டில், பிரிக்கப் படாத பீகார் மாநிலத்தில் இந்தி மொழி பேசுபவர்களில் 90.2% பேர் ஒருமொழி பேசுபவர்களாக இருந்தனர்.
- 2011 ஆம் ஆண்டில், பிரிக்கப்பட்ட பீகாரில், இந்த எண்ணிக்கை 95.2% ஆக உயர்ந்தது.
- இதே போல், இராஜஸ்தானில் 1991 ஆம் ஆண்டில் இந்தி மொழி பேசுபவர்களில் 93% ஆக இருந்த ஒரு மொழி பேசுபவர்களின் பங்கு ஆனது 2011 ஆம் ஆண்டில் 94.3% ஆக அதிகரித்தது.
- தமிழ்நாட்டில், 1991 ஆம் ஆண்டில் 13.5% தமிழ் பேசுபவர்கள் ஆங்கில மொழியையும் பேசுபவர்களாக உள்ளனர், இது 2011 ஆம் ஆண்டில் 18.5% ஆக உயர்ந்தது.
- இதற்கு நேர்மாறாக, ஹரியானாவில், ஆங்கில மொழியையும் பேசும் இந்தி மொழி பேசுபவர்களின் பங்கு ஆனது அதே காலக் கட்டத்தில் 17.5 சதவீதத்திலிருந்து 14.6% ஆகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டில், 1991 ஆம் ஆண்டில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட 0.5% பேர் மட்டுமே இந்தி மொழியை பேசினர் என்பதோடு இந்த எண்ணிக்கை ஆனது 2011 ஆம் ஆண்டில் 1.3% ஆக சற்று உயர்ந்தது.
- ஆனால், குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் இந்தி மொழியையும் பேசும் தாய்மொழி பேசுபவர்களின் பங்கில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவானது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★